எஸ்.டி.சி.எண்.49/2021 தேதி - 29.03.2022

Mr.S.Paramasivam, Power Agent of Mrs.P.Chandra, No.75/A/40, Mounasamy Math Street, Venkatapuram, Ambattur, Chennai 600 053 என்பவரின் குறுக்கு விசாரணை ம.த.சா.1=

இந்த வழக்கின் எதிரியை 2016 ம் ஆண்டு முதல் எனக்கு தெரியும். எதிரியை மோகன் ராஜ் என்பவர் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். இந்த புகாரில் சொல்லியுள்ள கொரட்டூர் கிராமத்தில் உள்ள சொத்தின் உரிமையாளர் எனது மனைவி தான் என்றால் சரிதான். எனது மனைவி எந்த ஆண்டு அந்த சொத்தை வாங்கினார் என்று எனது புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் சொல்லியுள்ள Joint venture Agreement ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கூறியுள்ள எதிரிக்கும் எனது மனைவிக்கும் இடையே ஏற்பட்ட MOU எந்த தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஜுலை மாதம் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. எனது புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் 15.06.2019 ல் ஏற்படுத்தப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். எனக்கு தேதி சரியாக ஞாபகமில்லை. எனது மனைவி எதிரி மீது சென்னை காவல் ஆணையரிடம் எதற்காக புகார் அளித்தோம் என்றால் Joint venture agreement மூலம் வீடு கட்டி தருவதாக கூறி ஏமாற்றி விட்டார்கள் அதற்காக புகார் அளித்திருந்தோம். நான் சென்னை காவல் ஆணையரிடம் எதிரி மீது கொடுத்த புகாரில் அவர் பணம் மோசடி செய்து விட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் எனது நிலத்தை அபகரித்துவிட்டு மோசடி செய்து விட்டதாக புகார் அளித்துள்ளேன். நான் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அளித்த புகாருக்கு ஒப்புகை வழங்கப்பட்டதா என்றால் இல்லை. அதை அம்பத்தூர் காவல் நிலையத்திற்கு பரிந்துரைத்து அனுப்பி விட்டார்கள். அவ்வாறு புகார் அளித்ததற்கான சான்று எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அளித்த புகாரில் எதிரி காசோலை எண்.325618 என்ற காசோலையை என்னிடம் கொடுத்ததாக நான் கூறியுள்ளதால் அந்த காசோலையை பற்றி இந்த வழக்கில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த காசோலை ஆனது Joint Venture மூலம் எங்களுக்கு சேர வேண்டிய 3

வீட்டில் 1 வீட்டை விற்பனை செய்து பணத்தை கொடுப்பதாக கூறி அதற்கான Advance தொகைக்கான ரூ.30,00,000/= காசோலையை காசோலை எண்.325618 மூலம் கொடுத்தார். அந்த காசோலையானது இன்னும் வங்கியில் செலுத்தப்படாமல் என்னிடம் தான் உள்ளது. இந்த வழக்கில் சொல்லியுள்ள வீட்டு மனைக்கு எந்த ஆண்டு நான் கட்டிட அனுமதி வாங்கினேன் என்றால் அவ்வாறு கட்டிட அனுமதி எதுவும் நான் வாங்கவில்லை. நான் ஏற்கனவே மோகன் ராஜ் என்பவருடன் சேர்ந்து Joint venture ஏற்படுத்தி கொண்டு வீட்டு மனைக்கான கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வாங்கினேன் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. மோகன் ராஜுடன் ஏற்படுத்திக் கொண்ட Joint venture அடிப்படையில் அவரால் கட்டிடம் கட்டி கொடுக்க முடியவில்லை என்று கூறியதால் அவரே தான் அந்த Joint venture ஒப்பந்தத்தை ரத்து செய்து எதிரியின் நிறுவனத்துடன் அன்றைய தேதியிலேயே Joint venture ஏற்படுத்திக் கொடுத்தார். மேற்படி மோகன் ராஜை பற்றி காவல் நிலையத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவரிடம் போட்ட joint venture ரத்து செய்யப்பட்டதால் அவரைப் பற்றி குறிப்பிடவில்லை. அம்பத்தூர் காவல் நிலையத்தில் அந்த புகாரானது விசாரணை செய்யப்பட்டது. எதிரியிடம் இருந்து அம்பத்தூர் காவல் நிலையத்தில் வைத்து இந்த வழக்கில் கூறியுள்ள 3 காசோலைகளையும் நான் வாங்கினேன் என்றால் சரியல்ல. வெளியில் வைத்து நாங்கள் சமரசமாக பேசி எதிரி ரூ.80,00,000/= தருவதாக ஒப்புக் கொண்டு அதை 3 தவணையாக கொடுப்பதாக கூறி 3 காசோலைகளை வழங்கினார். அவ்வாறு சமரசம் ஏற்பட்டு காசோலை மற்றும் MOU போட்ட பின்பு காவல் நிலையத்தில் உள்ள புகாரை வாபஸ் பெற்றுக் கொண்டேன். இந்த வழக்கு காசோலையை நான் ஏற்கனவே வங்கியில் செலுத்தி அது திருப்பப்பட்டதாகவும் கூறியுள்ளதால் அதற்கான வங்கி ரிட்டன் மெமோவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எதிரியிடம் இருந்து வாங்கிய இந்த வழக்கு காசோலையை தவிர ரூ.30,00,000/= க்கான மற்றொரு காசோலை வங்கியில் செலுத்தப்படாமல் என்னிடம் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள எனது மனைவி பெயரில் உள்ள நிலத்தில் வழித்தட பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எதிர்தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு தள்ளி வைக்கப்படுகிறது.

(Sd., S.Muthukrishna Muralidas.,)
Judicial Magistrate,
Fast Track Court, (Magisterial Level),
Ambattur.

// True Copy//
Judicial Magistrate,
Fast Track Court,
(Magisterial Level),
Ambattur.